முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.01.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 24.01.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தங்கராஜி | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | பாண்டியன் | கிராமம்.. | கல்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

6. எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1987. ராமசாமி சாரதாம்பாளுக்கு 5 மகன்கள் 2 மகள்கள் என்றால் சரிதான். சே.பெருமாள், பாலகிருஷ்ணன், ராமசாமி ஆகியோர் பங்காலிகள் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி ராமசாமியின் மகன் தான் 4 ம் பிரதிவாதி அன்பழகன் என்றால் சரிதான். ராமசாமி இந்த வழக்கில் என்ன ஆட்சேபணை தாக்கல் செய்துள்ள விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரம் சம்மந்தமாக ராமசாமி என்ன ஆட்சேபணை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படும் போது நான் இல்லை என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுப்பதற்கு முன்பு வழக்கறிஞரை சந்தித்து நான் விவரம் சொன்னேனா என்றால் எனது மாமியார் ஜெயலட்சுமி உடன் சென்றேன், ஜெலட்சுமி தான் விவரங்களை வழக்கறிஞரிடம் சொன்னார். ஜெயலட்சமி செட்டில்மெண்ட் பத்திரம் எடுத்துகொண்டு வழக்கு சொத்தின் பாத்தியத்தை பற்றி வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் பிரகாரம் பிரதிவாதிகள் வசம் இருக்கும் வழக்கு சொத்தினை வாதிகளிடம் ஒப்படைக்குமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட எதிர்தரப்பினர்களுக்கு ஜெயலட்சுமியோ அல்லது எனது மனைவி செல்வியோ சொத்து சுவாதினம் கொடுத்ததற்கு அனுமதி கொடுத்தோமா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட எதிர்தரப்பினர்கள் எதன் அடிப்படையில் சொத்து சுவாதினத்தில் இருக்கிறார்கள் என்றால் தவறான ஆவணங்களின்அடிப்படையில். அது என்ன என்ன தவறான ஆவணங்கள் என்று நகல் பெற்று பார்த்தேனா என்றால் இல்லை. அந்த தவறான ஆவணம் யார் யாருக்கு ஏற்ப்பட்டது என்று தெரியுமா என்றால் அன்பழகனுக்கு பரிவர்த்தனை பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்று அதன் பிறகு ஏற்பட்ட அனைத்து ஆவணங்களும். தவறான ஆவணங்களை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கிருஷ்ணமூர்த்தி,வீரமுத்து, அன்பழகன் ஆனால் பட்டா பெயர் மாற்றம் தவறான ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது.

9. தவறான பட்டா மாற்றம் குறித்து வட்டாட்சியருக்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அது என்ன வருடம் என்றால் 2014. அந்த மனுவின் பெயரில் உத்தரிவு பிரபிக்கப்பட்டதா என்றால் இல்லை. பட்டாவை ரத்து செய்யக்கோரி இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஜெகதாம்பாளுக்கு இந்த சொத்து எப்படி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் ஏன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேள் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அசல் ஆவணம் கேட்டப்பட்டால் கொடுப்பதற்கு தயாராக உள்ளேன்.

10. வழக்குரையில் அசல் ஆவணம் தாக்கல் செய்யாததற்கான காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சமி என்னுடைய மாமனார் மாமியார் என்றால் சரிதான். என்னுடைய மாமியார் மற்றும் மனைவி எல்லாம் திடகாத்திரமாக தான் உள்ளார்கள் என்றால் சரிதான். 02.08.1978 அன்று அன்பழகன் கிரய பத்திரத்தில் உள்ள கையெழுத்து என் மாமனார் மாமியார் கையெழுத்தா என்றால் கையெழுத்து எனக்கு புரியவில்லை. 02.08.1978 அன்று 1ம் வாதி மற்றும் அவர் கணவர் 4ம் பிரதிவாதி அன்பழகனுக்கு 63 1/4 செண்ட் நிலம் மற்றும் நத்தத்தில் உள்ள வீடு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை.

11. கல்குணத்தில் மாணிக்க படையாட்சி மகன் சீனிவாசன் தெரியுமா என்றால் தெரியும். மருவாயில் நாராயணசாமி மகன் பிச்சமுத்து தெரியுமா என்றால் தெரியும், அவர் என் மாமனார் பாலகிருஷ்ணனின் சித்தப்பா மகன். அவர்களுக்கும் எனக்கும் சுமுகமான உறவு உள்ளது என்றால சரிதான். அழிச்சுக்குடி கிராமத்தில் ராமலிங்கம் மகன் சுப்பிரமணியன் தெரியுமா என்றால் தெரியாது. சுப்பிரமணியனுக்கும் 5ம் பிரதிவாதிக்கும் 16.08.1978ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரம் மூலம் தாவா 2,3 இன சொத்துக்கள் 5ம் பிரதிவாதிக்கு

ஒதுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 2,3 இன சொத்திற்கு ராமசாமி பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி வாதி வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா 4 இன சொத்து 14.08.1979 ல் 4 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட பரிவர்த்தனை மூலம் 7 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது .

12. 02.08.1978 ல் தாவா 6 இன சொத்தில் பாலகிருஷ்ணன் அன்பழகனுக்கு 35 செண்ட் கிரயம் கொடுத்தார் என்றால் அந்த ஆவணம் பற்றி தெரியும் ஆனால் பாலகிருஷ்ணன் கிரயம் கொடுக்க உரிமை இல்லை. புல எண்.102/11 ல் 18 செண்ட் நிலத்தை ஜெயலட்சமி 22.03.1979 ல் 4 ம் பிரதிவாதி அன்பழகனுக்கு கிரயம் கொடுததார் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பொய்யான ஆவணம் என்றாலும் அது அமலுக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு புனையப்பட்ட விதம் தவறானது என்றால் சரியல்ல. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் சந்தை மதிப்பு படி கட்டவில்லை என்றால் சரியல்ல.

13. ஜெகதாம்பாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஜெகதாம்பாள், பாலகிருஷ்ணன் ஆகியோர் கிரயம் கொடுத்து பல ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது சரியல்ல என்றால் சரிதான். வாதிகள் உடைய நீண்ட அனுபோக உரிமையும் செயல் இழந்துவிட்டது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி புல எண்.102/11A 0.18 செண்டை தவிர்த்து பாக்கி சொத்துக்கள் மற்ற பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் கிரயம் கொடுக்கவில்லை. பணம் பறிக்கும் நோக்த்தோடு இந்த வழக்கை வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிவுற்றது.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri
Principal District Munsif (FAC)
Chidambaram